பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 01 புதன்கிழமை 15.06.2022 கதிர் 222

**இனி இது ரகசியம் அல்ல!**

பரபரப்பாகச் செய்திகள் வெளியாகும் இரண்டு விடயங்கள் தொடர்பில் இன்று தொட்டுச் செல்ல விரும்புகிறேன்.

இந்த மாதத்தில் இப்போது தான் இரண்டு கிழமைகள் முடிந்திருக்கின்றன. இதற்கிடையில் ஏழெட்டு இடங்களில்

☞2

# பலாலி சேவையை மீள ஆரம்பிக்க அதிகாரிகளுக்கு பிரதமர் பணிப்பு!



## இந்திய சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க திட்டம் தயாரிக்குமாறும் அவர் உத்தரவு

கொழும்பு, ஜுன் 15

பலாலி சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும், அடுத்த ஆறு மாதங்களுக்கு இந்தியாவில் இருந்து அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் திட்டங்களைத் தயாரித்துச் செயற்படுத்துமாறும் அதிகாரிகளுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அறிவுறுத்தினார்.

☞2

## எரிவாயு, எரிபொருள் பற்றாக்குறை; 3 வாரங்களுக்கு எரியும் பிரச்சினை!

### தவிர்க்க முடியாதது என்கிறார் பிரதமர்

கொழும்பு, ஜுன் 15

ஏற்கனவே அறிவித்ததற்கு அமைய எதிர்வரும் மூன்று வாரங்கள், எரிபொருள் குறித்த கடினமான காலம் என்றும், நாடு முழுவதும் தற்போது காணப்படும் எரிவாயு மற்றும் எரிபொருள் வரிசைகளில் இது தெளிவாகத் தெரிகிறது என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிரதமர் விடுத்துள்ள விசேட அறிவிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

தற்போது கப்பலில் நாட்டை வந்தடைந்துள்ள 3,500 மெற்றிக்தொன் எரிவாயு, வைத்தியசாலைகள், ஹோட்டல்கள் மற்றும் தகன சாலைகளுக்கு வழங்கப்படும்.

அதற்கு பின்னர் வரும் கப்பல்கள் மூலம் 4 மாதங்களுக்கான எரிவாயுவைப் பெற்றுக் கொள்ள 14 நாள்கள் செல்லும்.

☞2

## மீனவர் எல்லை மீறலைத் தடுக்க தமிழக முதல்வரிடம் விண்ணப்பம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜுன் 15

தமிழக மீனவர்கள் எல்லை தாண்டாமல் தடுக்க ஆவன செய்யுமாறு கோரி இந்தியத் துணைத் தூதர் ஊடாக தமிழ்நாடு முதல்வருக்கு வடக்கு மீனவர்களினால் மகஜர்

☞2

## நேற்றைய சுட்டுப் படுகொலையும் போதைப்பொருள் சர்ச்சைதானாம்



வத்தளையில் நேற்றைய (செவ்வாய்க்கிழமை) காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தவர்

☞2

## வலி வடக்கின் விவசாயக் காணிகளை விடுவித்து சாப விமோசனம் பெறுங்கள்

### விரட்டப்பட்டு 32 ஆண்டுகளின் பின்னும் மன்றாட்டம்






(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜுன் 15

நாட்டில் பஞ்சம், பட்டினி தலைவிரித்தாடத் தொடங்குகின்றது. வலி. வடக்கில் வளம் கொழிக்கும் விவசாயப் பூமிகளை ஆக்கிரமித்த படையினர் இன்னமும் அவற்றைத் தம்வசம் வைத்துள்ளனர். அந்தக் காணிகளுக்குச் சொந்தக்காரரான எமது மக்கள் அழுது அழுது ஏங்கிய கண்ணீரும்,

☞2

## மரக் கிளை ஓட்டோவின் மீது வீழ்ந்ததில் நால்வர் படுகாயம்



காலி உடுகம பிரதான வீதியில் கொட்டவ என்ற பகுதியில் சென்று கொண்டிருந்த ஓட்டோ ஒன்றின்மீது மரத்தின் பெரிய கிளை முறிந்து விழுந்ததில் அதில் பயணம் செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

அவர்கள் காலி

☞2

## தெற்குக் கடலில் மூவரைக் காணோம்

அம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட அம்பலாந்தோட்டை பிரதேசத்தில் கடலுக்கு சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகன் மற்றும் மருமகன் ஆகியோர் நீரில் மூழ்கிக்காணாமல்போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அம்பலாந்தோட்டை, வெலிபதன்வில பகுதியில் உள்ள விகாரை ஒன்றுக்கு சென்ற குழுவினர் அங்கிருந்து கடலுக்கு சென்றுள்ளனர்

☞2

## கொடிகாமம் விபத்தில் சைக்கிள் பயணி சாவு

### அடையாளம் காண உதவுமாறு பொலிஸ் தரப்பில் கோரிக்கை



ஏ9 வீதியில் கொடிகாமம், கொயிலாமனை சந்திப் பகுதியில் நேற்று மாலை கார் மற்றும் சைக்கிள் மோதி இடம்பெற்ற விபத்தில் சைக்கிளில் வந்தவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிந்தவர் தொடர்பில் அடையாளம் காண உதவுமாறும், தெரிந்தவர்கள் பொலிஸ் நிலைய இலக்கமான

☞2

## சமூகப் பாதுகாப்பு வரி 2.5 வீதம் இனி அறவீடு

2022 ஆம் ஆண்டின் இடைக்கால வரவு – செலவுத்திட்ட முன்மொழிவின் மூலம் சமூகப் பாதுகாப்பு நிதியமொன்றை அறிமுகப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியத்தின் மூலம் ஆண்டொன்றுக்கான மொத்த விற்பனைப் புரள்வு அதிகரிக்கும். இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள், சேவை வழங்குநர்கள், மொத்த வியாபாரிகள் மற்றும் சில்லறை வியாபாரிகளுக்கு 2.5 சதவீதத்தின் கீழ் புதிய வரியாக சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரியை அறிமுகப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்காக சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது.

இந்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நிதி,

☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சூட்டு சம்பவங்கள். பெரும்பாலும் தெற்கில். எல்லாச் சம்பவங்களிலும் modus operandi ஒரே பாணிதான்.

அடையாளம் காண முடியாதவாறு ஹெல்மெட், ஜாக்கெட் அணிந்து மோட்டார் சைக்கிள்களில் டிப்டாப்பாக வரும் ஆசாமிகள் – சூத்திரதாரிகள் – கண்மூடிக் கண் திறப்பதற்குள் துல்லியமாக, நுட்பமாக தமது கைவரிசையைக் காட்டி விட்டு மறைந்து விடுகிறார்கள்.

எந்தத் தடுமாற்றமும் குழப்பமுமின்றி கனகச்சிதமாக வேலை நடக்கின்றது. இலக்கு வைக்கப்பட்டவரை மட்டுமே வேட்டுகள் தாக்குகின்றன. போட்டுத் தள்ளும் வேலை சொல்லிவைத்தால் போல பிசகு, பிசிறல் இல்லாமல் கணத்துக்குள் அரங்கேறி விடுகின்றது.

நன்கு பயிற்சி பெற்ற தாக்குதல் ஸ்குவாட்டின் கைவரிசை போல விடயம் திடுதிப்பென முடிந்து விடுகின்றது.

போதைப் பொருள் கடத்தல் கும்பல்களுக்கு இடையேயான முரண்பாடு என்றோ, சர்ச்சை என்றோ கொலைக்கு காரணம் அல்லது சமாதானம் கூறப்படுகின்றது. சுட்டுக்கொல்லப்பட்ட எல்லோருமே போதைப்பொருள் கடத்தலுடன் சம்பந்தப்பட்டவர்கள்தான். அண்மையில் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் எதிலும் அப்பாவிகள் சுடப்பட்டனர் என்று பேச்சுக்குத் தன்னும் கதை இல்லை.

சரி பொலிஸ் சந்தேகிப்பது போல அல்லது வெளியில் கூறுவதுபோல போதைப் பொருள் கடத்தல் குழுக்களுக்கு இடையேயான மோதல் என்றால், அது என்ன பத்து நாள்களுக்குள் இப்படி திடீரென வரிசையான சூட்டு சம்பவங்கள்? இலக்கு வைக்கப்பட்ட நபர் துல்லியமாக அடையாளம் காணப்பட்டு மறுபேச்சுகோ தப்புவதற்கோ இடம் அளிக்கப்படாமல் போட்டுத் தள்ளப்படுகின்றார். இதுவரை காலமும் இல்லாமல் இப்போதுதான் அப்படி ஒழுங்காகப் போட்டுக் கொள்ளும் வசதியும் அதற்கான நவீன பிஸ்டல் முதலிய ஆயுதங்களும் அவர்களுக்கு கிடைத்திருக்கின்றனவா?

எனக்கு இது என்னவோ என்கவுண்டர் சம்பவங்களின் புதுவடிவம் என்றே தோன்றுகின்றது.

பொலிஸார் மற்றும் பாதுகாப்பு படையினர் மீது மனித உரிமை மீறல்கள், கொடூரப் படுகொலை குற்றங்கள் போன்றவை வராமல், அதேநேரம் மோசமான போதை வர்த்தகத்துடன் தொடர்புடைய கிரிமினல் சக்திகளின் கதையை முடிக்கும் – பூண்டோடு அழிக்கும் – கந்தசாமிப் பாணி சூரசம்ஹாரம் அதிகாரத்தின் ஆசீர்வாதத்துடன் – அவற்றின் அரூபக் கரங்களின் பின்னணியில் – அரங்கேறுவதாகவே தோன்றுகின்றது.

அடுத்தது – சட்டவிரோதமாக நாட்டைவிட்டு வெளியேற முயற்சிப்போர் பிரச்சினை. நாட்டின் மோசமான பொருளாதார நெருக்கடியால், அதிலிருந்து தப்புவதற்காக, எப்படியாவது நாட்டைவிட்டு வெளியேறி மேற்கு நாடுகள் அல்லது ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து எங்கேனும் ஓடித் தப்பிக்க வேண்டும் என்ற சிந்தனை – மனப் போக்கு – மக்கள் மத்தியில் விஸ்வரூபம் எடுத்து இருக்கின்றது. மக்களின் இந்தப் பேதமையை சில தரப்புக்கள் பணத்தைச் சூறையாடுவதற்கு வாய்ப்பாகப் பயன்படுத்துகின்றன என்றே தோன்றுகின்றது.

அண்மைக்காலத்தில் இவ்வாறு சட்டவிரோதமாகச் செல்ல முயற்சித்த பெண்கள், குழந்தைகள் உட்பட 250க்கும் அதிகமானோரை கடற்படையினர் கைது செய்துள்ளனர். கடலில் ஒரு கொஞ்ச தூரம் பயணித்த நிலையில் பெரும்பாலும் அவர்கள் மடக்கப்படுகிறார்கள்.

ஒவ்வொருவரிடமிருந்தும் 7 இலட்சம் ரூபா முதல் பத்து லட்சம் ரூபாய் வரைப் பெற்றுக் கொண்டே கடத்தல்காரர்கள் இவர்களைக் கப்பலில் ஏற்றிச் செல்கின்றார்கள் என்று கூறப்படுகின்றது.

அண்மைக் காலத்தில் இவ்வாறு புறப்பட்ட கப்பல்களில் ஆக 15 பேர் சென்ற ஒரு கப்பல் மட்டுமே ஆஸ்திரேலியா வரைச் சென்றடைந்து இருக்கின்றது. அதில் சென்றவர்களும் அங்கிருந்து திருப்பி அனுப்பப்பட்டு உள்ளார்கள்.

ஏனையோர் அனேகமாகக் கப்பலில் ஏறிப் புறப்பட்டு ஓரிரு நாள்களிலேயே கடற்படையினரிடம் வசமாகச் சிக்கி விடுகின்றனர். ஒரு கூட்டத்தினரிடம் சுளையாகப் பணத்தை அறவிட்டு, பின்னர் அவர்களைக் கப்பலில் ஏற்றி அனுப்பும் கடத்தல்காரர்கள், தாங்களாகவே அந்தக் கப்பலின் நகர்வுகள் பற்றிய தகவல்களை கடற்படையினருக்கு வழங்குகின்றனர் என்று ஒரு சந்தேகமும் உண்டு. கடற்படையினரின் கைதுடன் தங்களின் பொறுப்பு கழன்று விடும் என்று அவர்கள் (ஏற்பாட்டாளர்கள்) கருதுகிறார்கள் போலும்.

கடல் மார்க்கமாக ஆஸ்திரேலியா மற்றும் மேற்குலக இடங்களைச் சென்றடைய முடியாத அளவுக்கு கடும் இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கு மற்றும் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகள் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன என்று தெரிந்தும் இத்தகைய கடத்தல் பேர்வழிகளின் வலையில் நமது மக்கள் சிக்கி மில்லியன் கணக்கான ரூபாவை இழப்பது என்பது மிகவும் வருத்தத்திற்குரிய விடயம்தான்.

– மின்னல் –

## தெற்குக் கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு காணாமல் போன தாய்க்கு 55 வயது எனவும் அவரது மகனுக்கு 16 வயது எனவும் மருமகனுக்கு 22 வயது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வலி வடக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இட்ட சாபங்களுமே நாட்டின் இந்த நிலைமைக்குக் காரணம். இப்போதாவது அவர்களின் காணிகளை விடுவித்து சாபவிமோசனம் அடையுமாறு கோருகின்றோம்.

–வலிவடக்கில் இருந்து இடம்பெயர்ந்து இன்றுடன் 32 ஆண்டு நிறைவுறுவதை முன்னிட்டு வலி. வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த அமைப்பின் தலைவர் அ.குணபாலசிங்கம் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:–

இந்த நாட்டின் ஒரு பகுதி மக்களே, 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி வலிகாமம் வடக்கிலிருந்து விரட்டப்பட்டனர். சொந்த மண்ணுக்குச் செல்வோம் என்ற அவர்களின் எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றமாகி 32 வருடங்கள் நிறைவுறுகின்றன.

பாதுகாப்புப் படைகள் வல்வந்தமாகக் கைப்பற்றிய எமது பூமியில் 6 ஆயிரத்து 500 ஏக்கரை நிரந்தரமாகக் கபளீகரம் செய்யும் நோக்குடன் 2013ஆம் ஆண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எமது போராட்டங்களாலும், தொடர்ந்து வந்த ஆட்சி மாற்றத்தாலும் சுமார் 3 ஆயிரத்து 500 ஏக்கர் நிலம் மீள ஒப்படைக்கப்பட்டது. அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட நிலத்திலும் 500 ஏக்கரை பாதுகாப்புத் தரப்பும், பொலிஸாரும் இன்னமும் ஆக்கிரமித்து வைத்திருக்கின்றனர்.

போரே நடக்காத எமது பிரதேசங்களை மீள ஒப்படைக்கும்போது எங்கள் வீடுகள், ஆலயங்கள், பாடசாலைகள் என்று அனைத்துச் சொத்துக்களையும் இடித்தழித்துத் தரைமட்டமாக்கியே வழங்கினார்கள். நாம் காணி விடுவிப்புக்காக போராட ஆரம்பித்த பின்னர்தான் எமது சொத்துக்களை அழித்து துவம்சம் செய்தார்கள். அகதிகளாக அலைந்த நாங்கள், சொந்த மண்ணுக்குத் திரும்பியும் வீடுவாசல்கள் இல்லாது இருக்கின்றோம்.

யாழ்ப்பாணத்தின் தங்கம் என்று சொல்லப்படுகின்ற பலாலியின் வளம் கொழிக்கும் விவசாயக் காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. மீன்வளம் நிறைந்த மயிலிட்டிக் கிராமத்தின் அரைவாசிப் பகுதி விடுவிக்கப்படவில்லை.

எங்கள் நிலங்களை ஆக்கிரமித்துள்ள படைத்தரப்பு தாங்கள் விவசாயம் செய்கின்றார்கள். நாங்கள் பட்டினியால் சாக அவர்கள் எங்கள் நிலங்களில் அறுவடை செய்து தங்கள் வயிறு வளர்க்கின்றார்கள்.

தென்பகுதியில் கடந்த மே 9ஆம் திகதி களேபரத்தில் அரசியல்வாதிகள் பலரின் வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன. அவர்கள் சொத்துக்களை இழந்து ஒரு மாதத்துக்குள்ளேயே இழப்பீடு தருமாறு ஓலமிடுகின்றார்கள். ஆனால் எங்கள் சொத்துக்களை இடித்து தரைமட்டமாக்கி வாழ்க்கையை நடுவீதிக்கு கொண்டு வந்தவர்களே அவர்கள்தான். எங்களுக்கு இழப்பீடும் இல்லை மிகுதிக் காணி விடுவிப்பும் இல்லை.

அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்பது உண்மைதான். நாங்கள் அகதிகளாக அல்லல்படுகின்றோம். அவஸ்தைப்படுகின்றோம். தினம் தினம் கண்ணீர் விடுகின்றோம். எங்களின் கண்ணீரும், சாபமும் அவர்களைச் சும்மாவிடாது.

நாடே பட்டினியால் சாவடையும் இந்த நிலையில், வளம் கொழிக்கும் எங்கள் மண்ணை விடுவித்து, எங்களின் சாபத்திலிருந்து விமோசனம் பெறுமாறு, ஆட்சியாளர்களைக் கோருகின்றோம். – என்றார்.

## சமூகப் பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராகப் பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எரிவாயு, எரிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதற்கிடையில் எரிவாயுத் தொகையைக் கொண்டுவர எதிர்பார்க்கிறோம். அது குறித்த கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன.

இரண்டு தினங்களில் வரவுள்ள 40,000 மெற்றிக் தொன் எரிபொருள் கப்பலுடன் மேலும் பெற்றோல் மற்றும் டீசலுடன் இரு கப்பல்களின் வருகை உறுதி செய்யப்பட்டுள்ளன. அவை மாத இறுதி வரை போதுமானவை.

தற்போதுள்ள எரிபொருள் 7 நாள்களுக்குப் போதுமானது. மின்சார உற்பத்தி, போக்குவரத்து உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. அதற்கிடையில் நாளை 16ஆம் திகதி 40,000 மெற்றிக் தொன் எரிபொருள் கப்பல் நாட்டை வந்தடையும்.

அதன் பின்னர், இந்தியாவுடனான புதிய கடன் வரிசை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதும் 4 மாதங்களுக்கு எரிபொருள் கிடைக்கும். – என்றார்.

## பலாலி சேவையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சுற்றுலாத்துறை அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்றது. சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவும் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றினார்.

இந்த வருடத்தின் எஞ்சிய காலப்பகுதியில் சுமார் 800,000 சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும், இதன் மூலம் மதிப்பிடப்பட்டுள்ள வருமானம் 80 கோடி டொலர்கள் எனவும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

3.5 பில்லியன் டொலர் வருமானத்தை எதிர்பார்க்கும் வகையில் 2025ஆம் ஆண்டளவில் சுமார் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலாலி சர்வதேச விமான நிலையத்தை மீள இயக்குவதன் மூலம் இந்திய சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கச் செய்யலாம் என சுற்றுலாத்துறை வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

## மரக்கிளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என யக்கமுல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

இனிந்தும பிரதேசத்தில் வசித்து வரும் குடும்பத்தை சேர்ந்த 56 வயதான தாய், 58 வயதான தந்தை மற்றும் 30, 26 வயதான இரண்டு மகன்களே சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்களில் தாயும் ஒரு மகனும் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். படுகாயமடைந்துள்ள தந்தை முன்னரே கராப்பிட்டிய வைத்தியசா லையில் தங்கி சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

தந்தையை வைத்தியசாலையில் இருந்து வீட்டுக்கு அழைத்துச் செல்லும் வழியிலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந் துள்ளது. ஓட்டோவை மகன் ஒருவரே ஓட்டிச் சென்றுள்ளார். அவர் பல்கலைக்கழக மாணவர் எனப் பொலிஸார் தெரிவித்த னர்.

கொட்டவ காட்டில் இருந்த 150 அடி உயரமான பழைய மரம் ஒன்று மற்றுமொரு மரத்தின் மீது சரிந்து விழுந்துள்ளது. இதனால், மற்றைய மரத்தின் பெரிய கிளை முறிந்து வீதியில் சென்று கொண்டிருந்த ஓட்டோ மீது விழுந்துள்ளது.

## நேற்றைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மட்டக்குளி பகுதியைச் சேர்ந்த 23 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பான தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த கொலை இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

ஹெலகந்த – ஹெந்தல வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரினால் இந்தச் சந்தேகநபர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக சந்தேகநபர்களைக் கைது செய்ய பல பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

## கொடிகாமம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

021–2050222 அழைப்பெடுத்து தெரிவிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## மீனவர் எல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கையளிக்கப்படவுள்ளது.

இந்தியாவில் நிலவிய இயந்திரப் படகுகள் மூலமான இரண்டு மாத மீன்பிடித் தடைக் காலம் நேற்றுடன் நிறைவடைந்ததனால் தமிழக மீனவர்கள் கடற்றொழிலிற்கு தயாராகி விட்டனர்.

இவ்வாறு தொழிலிற்கு வரும் மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறாது தொழிலில் ஈடுபட அறிவுறுத்துவதோடு உரிய நடவடிக்கையினையும் மேற்கொள்ளுமாறு கோரியே இந்த மகஜர் கையளிக்கப்படவுள்ளது.

இந்தியத் துணைத் தூதர் ஊடாக தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெயசங்கர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000 மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## தேர்தலுக்கு அஞ்சும் பண்பு

**ஏதேனும் சாக்குப் போக்கு, உருட்டுப் புரட்டு, ஏமாற்று வாக்குறுதிகளைக் கொடுத்து ஆட்சி அதிகாரத்துக்கு வரும் நமது அரசியல் தலைவர்கள், தமது சீத்துவம் கெட்ட நடவடிக்கைகளினால் குறுகிய காலத்தில் மக்களிடம் அவப் பெயர் சம்பாதித்து விடுவார்கள். அதன் பின்னர் மீண்டும் மக்களைச் சந்திக்க – தேர்தல்களை எதிர்கொள்ள – அஞ்சுவார்கள். இது வழமை.**

**ஜனாதிபதித் தேர்தலில் பெருவெற்றி கிடைத்த கையோடு அதனை ஒட்டியே நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி வாகை சூடிய பொதுஜன பெரமுனவின் சீத்துவம் இப்போது மக்களிடம் அம்பலமாகி விட்டது. புதிய தேர்தல் ஒன்றை எதிர்கொண்டால் கதி என்னவாகும் என்பது அக்கட்சியினருக்கு நன்கு விளங்கியுள்ளமையால், அதனை தவிர்த்து, கிடைத்த வாய்ப்பை இயன்ற காலம் முழுவதும் அனுபவித்துக் கழிக்க – களிக்க – அவர்கள் விரும்புகின்றனர்.**

**ஆண்டிறுதியில் வரப்போகும் உள்ளூராட்சித் தேர்தலில் அவர்களின் செல்வாக்கு நிலைமை அம்பலமாகும்.**

**இந்தப் போக்குப் புதிதல்ல. 2015இல் அதிகாரத்துக்கு வந்த நல்லாட்சி அரசின் பொட்டுக்கேடு 2018இல் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் அம்பலமாக, அதற்குப் பின்னர் நடக்க வேண்டிய மாகாண சபைத் தேர்தல்களையே தனது குயுக்தி நடவடிக்கைகள் மூலம் இல்லாமலாக்கியது அப்போது நல்லாட்சியின் பெயரில் அதிகாரத்தில் இருந்த ஐக்கிய தேசிய முன்னணி.**

**அன்று தேர்தலுக்குப் பயந்து ஓடி ஒளிப்பதற்காக நல்லாட்சி அரசு ஏற்படுத்திய – நாடிய – நடவடிக்கை முறையினால் இப்போது நான்கு வருடங்கள் கடந்தும் ஒரு மாகாண சபைக்குக் கூடத் தேர்தல் நடத்தவே முடியாத இக்கட்டு வந்திருக்கின்றது.**

**இப்போது மாகாண சபைத் தேர்தலை நடத்துவது உட்பட்ட அனைத்துத் தேர்தல் முறைமைகள் குறித்தும் உரிய பரிந்துரைகளைச் செய்வதற்கு நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது இறுதிப் பரிந்துரை குறித்துத் தீர்மானிப்பதற்காக இன்று பிற்பகல் நாடாளுமன்றத்தில் அதன் தலைவர் தினேஷ் குணவர்தனா தலைமையில் கூடுகின்றது.**

**இந்தத் தெரிவுக்குழுவை தற்போதைய பொதுஜன பெரமுன அரசு நியமித்த காலகட்டம் வேறு. இறுதிப் பரிந்துரையை தீர்மானிக்க அது கூடும் இன்றைய காலகட்டம் வேறு.**

**அடுத்தடுத்து இரண்டு தேர்தல்களில் – ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் – வெற்றி பெற்ற சூட்டில் இனி வரக் கூடிய தேர்தல்களிலும் வெல்லலாம் என்ற திமிர்ச் சிந்தனைப் போக்கு இருந்த காலத்தில் தான் அந்தத் தெரிவுக் குழு நியமிக்கப்பட்டது. அதன் அமர்வுகள் நடத்தப்பட்டன.**

**நீண்ட காலம் நிலுவையாக இருக்கும் மாகாண சபைத் தேர்தலை உடனடியாகப் பழைய தேர்தல் முறைமைகளின் கீழ் ஒரு தடவையேனும் நடத்தி முடிப்பதற்கேற்ப பழைய மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை மீள நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் என்ற சுமந்திரன் எம்.பியின் ஆலோசனையை தனது இறுதிப் பரிந்துரையாக வைக்கலாம் என இந்தத் தெரிவுக்குழு முன்னர் கொள்கையளவில் பரந்த உடன்பாட்டுக்கு வந்திருந்தது. அன்றைய அரசியல் நிலைமை வேறு, இன்றைய அரசியல் நிலைமை வேறு. மேசை ஆளும் தரப்புக்கு மாறாக இன்று திரும்பி விட்டது.**

**முன்னர் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பரந்த இணக்கம் ஏற்பட்ட அம்சம் இன்று கூடும் தெரிவுக்குழுவின் கூட்டத்தில் நீடிக்குமா என்பது சந்தேகமே. தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுப்பதைத் தவிர்ப்பதற்காக மொட்டுக் கட்சியினர் அடிக்கக் கூடிய குத்துக்கரணத்தை – பல்டியை – இன்றைய தெரிவுக்குழு அமர்வில் காண முடியும்.**

# வடக்கு, கிழக்கு மாகாண நிலத்தை பறித்து மதத்தைத் திணிக்கிறார்கள்!

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் சீற்றம்



வடக்கு, கிழக்கு மாகாண நிலத்தை பறித்து மதத்தை திணித்து கொண்டிருக்கின்றார்கள் என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

குருந்தூர் மலையில் விகாரை அமைப்பதற்கு எதிராக இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மக்கள் சாப்பிட வழியில்லை. உணவுக்கு, எரிபொருளுக்கு, எரிவாயுவுக்கு என அலைகின்றார்கள். விலைவாசி ஏற்றம், மின்சார பற்றாக்குறை, இவ்வாறு தொடர்ச்சியாக மக்கள் அல்லல்பட்டு கொண்டிருக்கும் இந்த நேரத்திலும் அரசாங்கமும், அரசாங்கத்தோடு சம்பந்தப்பட்ட திணைக்களங்களும் தங்களுடைய வேலைகளை அதாவது காணி பறிப்பு வேலைகளையும், மதத் திணிப்பு வேலைகளையும், கச்சிதமாகச் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

இப்படியான நடவடிக்கையால் மக்கள் கஷ்டத்தின் மத்தியில் துவண்டு போய் இருக்கின்றார்கள். மூன்று தினங்களுக்கு முதல் வட்டுவாகல் கோட்டாபய கடற்படை முகாம் நில அளவை திணைக்களம் அளக்க வந்த போது அங்கு நாங்கள் எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டு மக்களுக்கான வழியிலே அதை மீட்க முடிந்தது.

ஆனால் எப்போது திரும்ப வருகின்றார்களோ தெரியாது.

அதே போல் இன்றைக்கு குருந்தூர் மலையில் பகிரங்கமாக ஒரு புத்தர் சிலையை வைக்கப் போகிறோம் என அறிவித்து விட்டு வழக்கு நடந்து கொண்டிருக்கும் சமயத்தில் கூட இங்கே வந்து தங்களுடைய வேலைகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

இப்படியான நேரத்தில் மக்கள் ஒன்று திரண்டு அறுபது பேருக்கு மேல் வந்து உடனடியாக அவர்களை ஓர் இடத்திலும் நுழைய விடாமல் இப்படியான விழாக்கள் போன்ற நடவடிக்கைகளை செய்யவிடாமல் புத்த மத திணிப்புகளை மேற்கொள்ளப்படாமல் தடுத்து நிறுத்தியிருக்கின்றோம்.


ஈற்றில் எங்களுக்கு பதில் வழங்கிய தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் அல்லது அதனோடு சேர்ந்த பொலிஸார் எல்லோருமாக கூறிய ஒரு பதில், தாங்கள் உடனடியாக நிறுத்துகின்றோம் என்றும் மேற்கொண்டு மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலாளர் உட்பட இதனோடு சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளை அழைத்து இதற்கான ஒரு சரியான முடிவு கிடைத்ததன் பின்பு தாங்கள் இந்தப் பணிகளைத் தொடர்வதாகக் கூறி இருக்கின்றார்கள். ஆனால் எங்களுக்கு நம்பிக்கை இல்லை.

இப்போது இங்கே வந்து பார்த்த போது ஒன்று தெரிகிறது. இங்கே இருந்த எங்களுடைய சைவ அடையாளங்களும் இல்லை. இப்படியான ஆக்கிரமிப்பு சிங்கள, பௌத்த இனவாதிகளிடம் ஊன்றிப் போய் எங்களுடைய வடக்கு, கிழக்கு மாகாண நிலத்தை இன்னும் பறித்து கொண்டிருக்கிறார்கள்.

மதத்தைத் திணித்து கொண்டிருக்கின்றார்கள் என்பதுதான் உண்மை. ஆனால் மக்களுடன் சேர்ந்து மிகவும் சிரமத்தின் மத்தியிலே இதனைத் தடுத்து நிறுத்தியிருக்கின்றோம். - எனத் தெரிவித்தார்

# குருந்தூர் மலையில் புத்தர் சிலையை நிறுவும் முயற்சி!

## அகில இலங்கை தொழிலாளர் கூட்டமைப்பு கண்டனம்



தமிழர்கள் பாரம்பரியமாக வழிபட்ட குருந்தூர் மலையில் சிவன் வழிபாடு இருந்த இடத்திலே பலாத்காரமாக புத்தரின் சிலையை வைப்பதற்கு அகில இலங்கை தொழிலாளர் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

குருந்தூர் மலைப்பகுதி தொல்பொருள் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அங்கு இனங்காணப்பட்ட தொல்பொருள் இடத்தில் புதிதாக விகாரை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் இந்த விகாரையில் சிறப்பு வழிபாடு ஒன்றை மேற்கொள்ள தென்னிலங்கையில் இருந்து பௌத்த மதகுருமார்கள், மக்கள் என பலர் வருகைதந்தபோது எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களின் நடவடிக்கையால் இந்த வழிபாடுகள் கைவிடப்பட்டன.

இந்த சம்பவம் தொடர்பாக இன்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அன்ரனி ஜேசுதாசன் இவ்வாறு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் -

முல்லைத்தீவு மாவட்டத்தில் குருந்தூர்மலையில் நடைபெற்ற சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழர்கள் பாரம்பரியமாக வழிபட்ட குருந்தூர் மலையில் சிவன் வழிபாடு இருந்த இடத்திலே பலாத்காரமாக புத்தரின் சிலையை வைப்பதற்கு தென்னிலங்கையிலிருந்து குழுவாகச் சென்று பௌத்த பிக்குகள் எடுத்த முயற்சி, அதற்கு பாதுகாப்புப் படையினர் வழங்கிய பாதுகாப்பு இது மிகவும் கண்டிக்கத்தக்க ஒரு விடயமாக இருக்கிறது.

30 வருட கால யுத்தத்தில் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நிலைமாறுகால நீதியை நிலைநாட்டி நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு 2009 இற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த எந்த அரசும் சரியான முயற்சிகளை எடுக்கவில்லை.

இந்தநிலையில் வடக்குப் பகுதியில் இருக்கின்ற காணிகளையும் அந்த மக்களுடைய பாரம்பரிய சொத்துக்களையும் சூறையாடுவதற்கு எடுக்கின்ற முயற்சி மிகவும் கண்டிக்கத்தக்க விடயமாகும்.

இராணுவ மயமாக்கல், வனப் பாதுகாப்புத் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் என கூறி மக்களுடைய காணிகளையும் வரலாற்று சின்னங்களையும் கையகப்படுத்தும் நடவடிக்கையை இந்த அரசாங்கம் முற்றாக நிறுத்த வேண்டும். - எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி உணவு, மருந்து, சமையல் எரிவாயு மற்றும் பிற எரிபொருள்கள், கழிப்பறை காகிதாதிகள் மற்றும் தீப்பெட்டிகள் போன்ற அத்தியாவசியப் பொருள்களின் கடுமையான பற்றாக்குறையைத் தூண்டியுள்ளது, இலங்கையர்கள் எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயுவை வாங்குவதற்காக கடைகளுக்கு வெளியே பல மணிநேரம் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.
இந்திய கடன் வரிசையின் கீழ் கிட்டுகின்ற கடைசி எரிபொருள் கப்பல்கள் இந்த மாதம் இலங்கைக்கு வந்தடைகின்றன.
இந்தியாவின் உதவியைச் சார்ந்து இருக்கும் எதிர்கால விநியோகங்களின் வாழ்வாதாரம் குறித்த எந்த அறிகுறியும் இல்லாமல் முற்றுப் பெறும் கடைசி விநியோகம் இது.



# நாட்டில் எரிபொருள் விநியோகம் நெருக்கடியில்!

## இந்தியக் கடனுதவியில் கிட்டியவையும் தீர்ந்தன



1948 இல் பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்றதன் பின்னர் இலங்கை இப்போதுதான் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி உணவு, மருந்து, சமையல் எரிவாயு மற்றும் பிற எரிபொருள், கழிப்பறை காகிதாதிகள் மற்றும் தீப்பெட்டிகள் போன்ற அத்தியாவசிய பொருள்களின் கடுமையான பற்றாக்குறையைத் தூண்டியுள்ளது, இலங்கையர்கள் எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயுவை வாங்குவதற்காக கடைகளுக்கு வெளியே பல மணிநேரம் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

"ஐ.எல்.சி. (இந்தியன் லைன் ஒவ் கிரெடிட் – இந்தியக் கடன் வரிசைத் திட்டம்) இன் கீழ் ஜூன் 16 ஆம் திகதி கடைசி டீசல் ஏற்றுமதியையும், ஜூன் 22 ஆம் திகதி கடைசி பெற்றோல் ஏற்றுமதியை




யும் நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சனா விஜேசேகர செய்தியாளர்களிடம் கூறினார்.

இலங்கையின் எரிபொருள் கொள்வனவுகள் இந்தியக் கடன் வரிசைத் திட்டத்தில்தான் முழுமையாகத் தங்கியிருந்தன – ஆரம்பத்தில் ஐம்பது கோடி டொலர் கடன் வரிசையானது பின்னர் இருபது கோடி அமெரிக்க டொலர்களுடன் கூடுதலாக வழங்கப்பட்டது.

அனல் மின் உற்பத்திக்கான டீசல் விநியோகத்தில் அழுத்தம் வருவதால், பெப்ரவரி நடுப்பகுதியில் இருந்து தீவு எரிபொருள் நிரப்புதலுக்கான நீண்ட வரிசைகளை எதிர்கொண்டு வருகிறது.

ஏப்ரல் தொடக்கத்தில், மின் உற்பத்திக்கான டீசல் மற்றும் உலை எண்ணெய் பற்றாக்குறை காரணமாக தீவு 10 மணி நேர மின்வெட்டைச் சந்தித்தது.

மின்வெட்டுக் காரணமாக தனியார் ஜெனரேட்டர்களை இயக்க மக்களுக்குத் தேவைப்படுவதால், தினசரி டீசலின் குறைந்தபட்சத் தேவை 5,000 மெற்றிக் தொன்னாகியுள்ளது என்று அமைச்சர் விஜேசேகர கூறினார்.

நாங்கள் கடந்த வாரம் முன்னுரிமை அடிப்படையில் 2,800 – 3,000 மெற்றிக் தொன்களை மட்டுமே வழங்கினோம், என்று விஜேசேகர குறிப்பிட்டார். வாரத்திற்கு முழுத் தேவையான டீசல் இப்போது வழங்கப்படுகிறது.

தினசரி பெற்றோல் தேவை 3,500 மெற்றிக் தொன். கடந்த செவ்வாய்க்கிழமை முதல் நாங்கள் தினசரி 3,000 – 3,200 மெற்றிக் தொன்களை வழங்குகிறோம். – என்றார் அவர்.

மண்ணெண்ணை தொடர்பான நிலைமை மிகவும் மோசமாக இருப்பதாக அவர் கூறினார். மீன்பிடி மற்றும் விவசாயத் துறைகள் மண்ணெண்ணையைப் பயன்படுத்துகின்றன.



தேர்ந்தெடுக்கப்பட்ட மீன்பிடி பகுதிகளுக்கு நாங்கள் மண்ணெண்ணைஅனுப்புகிறோம், சிலர் வாகனங்களை இயக்கவும் பயன்படுத்துவதால் மண்ணெண்ணை விநியோகம் பரவலாகத் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது, என்று அவர் கூறினார்.

எரிபொருள் விநியோகத்தில் எதிர்கொள்ளும் சிரமங்களுடன், எரிபொருள் வாங்குதலுக்காக இந்தியாவிடமிருந்து கடன் வரிசைகளை நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அரசாங்கம் கூறியது.

கடனில் சிக்கித் தவிக்கும் தீவு நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான எரிபொருள் தட்டுப்பாட்டைக் குறைக்க உதவுவதற்காக, உணவு மற்றும் மருத்துவப் பொருள்களைத் தவிர, ஆயிரக்கணக்கான தொன் டீசல் மற்றும் பெற்றோலை இலங்கைக்கு இந்தியா வழங்கியுள்ளது.

இந்திய உயர் தூதரகம் வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில், 'அண்டை நாடுகளுக்கு முதலில்' என்ற கொள்கையின்படி, இலங்கையின் நேர்மையான நண்பன் மற்றும் பங்காளி என்ற வகையில், இந்தியா இலங்கை மக்களுக்கு பலதரப்பட்ட உதவிகளை கடந்த சில மாதங்களில் வழங்கியுள்ளது என்பது நினைவு கூரத்தக்கது." – என்று கூறப்பட்டது.

இந்தியாவின் ஆதரவானது 3.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பொருளாதார உதவியில் இருந்து உணவு, மருந்துகள், எரிபொருள், மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருள்களை வழங்குவதன் மூலம் இலங்கையின் உணவு, சுகாதாரம் மற்றும் எரிசக்தி பாதுகாப்பைப் காத்துக் கொள்ள உதவுகிறது என்றும் அது கூறியது.

நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள தீவு நாட்டிற்கு எரிபொருளுக்காக இந்தியாவைத் தவிர வேறு எந்த நாடும் பணம் வழங்கவில்லை என்று இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதன்கிழமை தெரிவித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(மூலம்: பி.ரி.ஐ.)

# சிறைச்சாலைகளில் கொடுக்கப்படும் உணவு அவர்களை வாழவைக்குமா?

## அருட்தந்தை சத்திவேல் கேள்வி



தற்போதைய சூழ்நிலையில் சிறைச்சாலைகளில் கொடுக்கப்படும் உணவு அவர்களை வாழவைக்குமா? என சிந்திக்க வைத்துள்ளதாக அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குள் அரசியல் கைதிகளுக்கான அடிப்படை தேவைகள் சரியான முறையில் கிடைக்கின்றனவா? எனத் தொடர்பு கொண்டு வினவிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்–

கடந்த மாதம் 9ஆம் திகதி காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட அரச பயங்கரவாத திட்டமிட்ட தாக்குதலின் சூத்திரதாரிகளில் ஒருவராக மக்களால் அடையாளப்படுத்தப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பொலிஸாரால் தேடப்படும் நிலையில் சரணடைந்த விதமும் அதே வேகத்தில் பிணையில் வெளியே வந்த முறைமையும் பல வருடங்களாகப் பிணையின்றி சிறையில் வாடும் அரசியல் கைதிகளுக்கும் ஏனைய கைதிகளுக்கும் மட்டுமல்ல பொதுமக்களுக்கும் ஏற்றுக்கொள்ள முடியாத நிகழ்வாகவே உள்ளது.

பணபலமும் அதிகாரமும் நீதிதேவதையின் கண்களில் மண்ணை தூவிவிடுமோ எனும் பயமும் சந்தேகமும் மக்கள் மனதில் ஏற்படுவது தொடர்பில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

இது இவ்வாறிருக்க, தற்போதைய நாட்டின் பொருளாதார நிலையில் 'பொதுமக்கள் இரண்டு வேளை உணவு உண்பதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும்' எனத் தற்போதைய பிரதமர் அறிவித்தல் விடுத்துள்ளார். இதற்கு முன்னமே அடிமட்ட மக்கள் இரண்டு வேளை அல்லது ஒரு வேளை உணவு மட்டுமே உண்டு அரைவயிற்று உணவோடு வாழ்வு போராட்டம் நடத்துகின்றனர்.

ஏற்கனவே சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கு போதுமான மற்றும் போஷாக்கான உணவு கொடுக்கப்படுவதில்லை எனக் கைதிகளே விசனம் தெரிவித்துள்ளமையும் மறக்க முடியாது.

ஒரு சிலருக்கு வெளியிலிருந்து உறவுகளால் உணவு கொடுக்கப்பட்டாலும் பெரும்பாலான கைதிகளுக்கு உணவு கிடைப்பதில்லை.

அவர்கள் சிறைச்சாலை உணவையே எதிர்பார்த்து இருக்கின்றனர். தற்போதைய நிலையில் சிறைச்சாலைகளில் கொடுக்கப்படும் உணவு அவர்களை வாழவைக்குமா? என சிந்திக்க வைத்துள்ளது. இது உறவுகளுக்கு பெருங்கவலையைத் தோற்றுவித்துள்ளது.

இன்றைய காலகட்டத்தில் உணவு எனக் கைதிகளுக்கு உணவு கொடுக்கப்பட்டாலும் அது அவர்களுக்கு போதுமான போஷாக்கான உணவு கொடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்றே தோன்றுகின்றது. நாடு முழுவதிலும் 23 ஆயிரத்துக்கும் அதிகமான கைதிகள் சிறையில் உள்ளனர். இவர்களுக்கு ஆட்சியாளர்களால் போஷாக்கான உணவு கொடுக்க முடியுமா?

சிலவேளைகளில் துர் நாற்றம் வீசும் அவிந்ததும், அவியாததுமான சோற்றோடு மிளகாய்த்தூள் கலக்கப்பட்ட தண்ணீர் போன்ற கறி கைதிகளுக்கு கொடுக்கப்படுவதாகக் கைதிகளின் பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதுவும் ஒரு வகை தண்டனையாகவே கைதிகள் நினைக்கின்றனர்.

இத்தகைய உணவு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தசாப்தத்துக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கு கொடுப்பதால் உடல் ரீதியான பல்வேறு பக்க விளைவுகளையே ஏற்படுத்தும். இது அவர்களின் எதிர்கால வாழ்வையே பாதிக்கின்ற ஒன்றாகவே அமையும். இதனையும் திட்டமிட்ட வாழ்வு பறிக்கும் தண்டனை என்றே கூறலாம்.

மேலும் போஷாக்கற்ற போதுமான உணவு கொடுக்கப்படாத சூழ்நிலையில் பல்வேறு நோய்களும் அவர்களைத் தொற்றக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது.

இவ்வாறு கடந்த காலத்திலும் பல அரசியல் கைதிகளுக்கு ஏற்பட்டுள்ளது. தற்போது உணவு பற்றாக் குறையோடு நாட்டில் மருந்து தட்டுப்பாடு நிலவுகின்ற சூழ்நிலையில் நீண்ட நாள் சிறையில் வாடும் அரசியல் கைதிகள் நோயில் தள்ளப்படுவது தண்டனையாகவே கொள்ளல் வேண்டும்.

அரசியல் கைதிகள் நீதிமன்றத்தால் குற்றவாளிகள் எனக் குறிப்பிட்டு தண்டனை அளிக்கும் முன்னர் போதிய மற்றும் போசாக்குத் தரம் குறைந்த உணவின் காரணமாக நோய்களுக்கு உட்படுவதை நீதி இடமளிக்கக்கூடாது. ஒரு மிருகம் என்று கூட்டில் அடைத்து வைத்து போதிய உணவு கொடுப்பது குற்றமாகக் கருதப்படும் பௌத்த சிந்தனைவாதி நாட்டில், அரசியல் கைதிகள் மிருகங்களை விடப் பல வருடங்களாக அடைக்கப்பட்டு போதிய போசாக்கான உணவு கொடுக்காது உள்ள 80 கைதிகளும் மனிதர்களே எனும் கூற்றுக்கு எதிரானது மட்டுமல்ல தண்டனைக்குரிய குற்றமாகவே பார்க்கப்படல் வேண்டும்.

இந்தத் தருணத்தில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பிணையில் வந்தமையைப் போன்று, சட்டத்தின் முன் யாவரும் சமமாக மதிக்கப்பட்டும் நாட்டின் பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டும் நீண்ட நாள்களாக சிறையில் வாழும் அனைத்து அரசியல் கைதிகளும் வெளியில் செல்லக் கூடிய நிலையிலுள்ள ஏனைய கைதிகளும் அவரவர் குடும்பத்தோடு சேர்ந்து வாழ இடமளிக்கப்பட வேண்டும். – எனத் தெரிவித்தார்.

# ரயில் மற்றும் பஸ் சேவைகளை மேலதிகமாக அதிகரிக்க முடிவு!

## அமைச்சர் பந்துல தகவல்



நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டின் காரணமாக அசௌகரியங் களுக்கு உள்ளாகியுள்ள சகல தரப்பினரதும் நலன் கருதி, இன்று (புதன்கிழமை) முதல் மேலதிகமாக ரயில்கள் மற்றும் பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாக போக்குவரத்துத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்–

இன்று (புதன்கிழமை) முதல் கொழும்பு – கண்டி ரயில் சேவையில் மேலதிகமாக இரு ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

அதற்கமைய தினமும் அதிகாலை 5.20 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்படும் ரயில் காலை 8.44 மணிக்கு கண்டியைச் சென்றடையும். அதே போன்று அதிகாலை 4.50 மணிக்கு கண்டியிலிருந்து புறப்படும் ரயில் காலை 7.40 மணிக்கு கொழும்பைச் சென்றடையும்.

களனிமிட்டியாவத்த பகுதியில் வக ரயில் நிலையத்தில் காலை 6.20 மணிக்கு புறப்படும் ரயில் காலை 8.12 மணிக்கு கொழும்பை வந்தடையும்.

அதே போன்று கொழும்பிலிருந்து அதிகாலை 4 மணிக்கு புறப்படும் ரயில் 5.43 மணிக்கு வக ரயில் நிலையத்தை வந்தடையும்.

அதே போன்று கல்கிஸையிலிருந்து இரவு 11 மணிக்கு புறப்படும் ரயில் மறுநாள் அதிகாலை 5.30 மணிக்கு யாழ்ப்பாணத்தை சென்றடையும்.

இந்த ரயில் ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணிக்கு புறப்பட்டு திங்கட்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு கல்கிஸை ரயில் நிலையத்தை வந்தடையும்.

இந்த ரயில் சேவை 17 ஆம் திகதி ஆரம்பமாகும். வார இறுதி நாள்களில் வெளியிடங்களுக்குச் செல்வோருக்காக இந்த ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் கொழும்பிலிருந்து அநுராதபுரத்துக்கு நிரந்தர ரயில் சேவை ஆரம்பிக் கப்பட்டுள்ளது. நாளாந்தம் அதிகாலை 4.15 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்படும் ரயில் காலை 8.15 மணிக்கு அநுராதபுரத்தை சென்றடையும். அதேபோன்று அதிகாலை 3.45 மணிக்கு அநுராதபுரத்திலிருந்து புறப்படும் ரயில் காலை 8 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்தை வந்தடையும்.

இவை தவிர பாடசாலை மாணவர்களுக்காக 20 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அது தொடர்பான நேர அட்டவணை ஊடகங்கள் ஊடாக வெளியிடப்படும். – என்றார்.

# குழந்தைகளின் மத்தியில் வேகமாக பரவும் காய்ச்சல்

## அவதானத்துடன் செயற்படுமாறு எச்சரிக்கை

கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என குழந்தைகள் நல மருத்துவர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இது குழந்தைகள் மத்தியில் வேகமாக பரவி வருவதாகத் தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காய்ச்சல், உடல்வலி, இருமல், சளி ஆகியவை இந்த நோயின் அறிகுறிகள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். முன்னர், சளி கொரோனாவுடன் தொடர்புடையதாக இருந்த போதிலும், தற்போது பலர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குழந்தைகள் மத்தியில் இது எளிதில் பரவக்கூடியது என்பதால், குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் தவறாமல் கைகளைக் கழுவ வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக வகுப்பறைகள், முன்பள்ளிகள், வைத்தியசாலைகள் மற்றும் பொது போக்குவரத்து சேவைகளைப் பயன்படுத்தும் போது முகக்கவசங்களை அணியுமாறு அறிவுறுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். காய்ச்சலைக் குறைக்க வெதுவெதுப்பான நீரை பயன்படுத்த முடியும் எனவும் குழந்தைகள் நல மருத்துவர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார். எனினும், எவராவது சுவாசப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருந்தால் அல்லது கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தால் அவர்கள் மருத்துவர்களின் உதவியை நாட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# வாக்காளர்கள் பட்டியலை காட்சிப்படுத்தல் முன்னெடுப்பு

இந்த ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளுடன் தொடர்புடைய வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தல் இன்று (புதன்கிழமை) முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய குறித்த பட்டியல் எதிர்வரும் ஜூலை 12 ஆம் திகதி வரை காட்சிப்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படும் மற்றும் வாக்காளர் பட்டியலிலுக்கு சேர்க்கப்படும் பெயர் பட்டியல் இன்று முதல் ஜூலை 12 ஆம் திகதி வரை காட்சிப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பௌத்தத்தின் பெயரினால் மேற்கொள்ளப்படுகின்ற சிங்கள பௌத்த ஆக்கிரமிப்புகளை ஏற்கமுடியாது!

## கஜேந்திரன் எம்.பி. கடும் காட்டம்

பௌத்த மதத்தை மதிக்கிறோம். ஆனால் பௌத்தத்தின் பெயரால் மேற்கொள்ளப்படுகின்ற சிங்கள பௌத்த ஆக்கிரமிப்புகளை, ஒரு போதும் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

குருந்தூர் மலையில் விகாரை வைப்பதற்கு எதிராக 13 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குமுழமுனை பிரதேசத்தில் இருக்கக்கூடிய குருந்தூர் மலை பகுதியிலே சட்டத்துக்கு முரணாக தொல்பொருள் அகழ்வு செய்யப் போவதாகக் கூறி ஆரம்பிக்கப்பட்ட பணிகளைத் தொடர்ந்து சட்டவிரோதமான முறையிலே விகாரை ஒன்றை அமைக்கின்ற வேலைகளிலே தொல்லியல் திணைக்களமும், பௌத்த மத பீடங்களும் இணைந்து ஈடுபட்டிருந்தன.

பூஜை வழிபாடுகளுடன் அந்தக் கோபுரத்துக்குரிய கட்டுமானங்களை ஆரம்பிக்கின்ற நிலையிலே மக்கள் இணைந்து இந்த செயற்பாடு சட்ட விரோதமான செயற்பாடு. குருந்தூர் மலை பல ஆயிரம் வருடங்கள் தமிழர்களுடைய பழைமையான வரலாற்றோடு அரசாட்சி புரிந்த இடம்.

இங்கே சைவ, தமிழ் அடையாளங்கள் ஏற்கனவே புதைந்து கிடந்தன. அண்மைக் காலம் வரையில் சிவன் வழிபாடுகள் இடம் பெற்றிருக்கின்றன. இராணுவத்தினருடைய அல்லது வேறு தரப்புகளுடைய துணையோடு அவை அனைத்துமே அழித்தொழிக்கப்பட்டிருக்கின்றன.

இங்கு அகழ்வு ஆய்வை ஆரம்பிப்பதற்காக அப்போதைய தொல்லியல் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க வந்த போது அதற்கு எதிராகப் போராட்டம் ஒன்று நடைபெற்றது. அப்போது அவர் மக்களுக்கு ஒரு விடயத்தைத் தெரியப்படுத்தியிருந்தார். தாங்கள் இதில் அகழ்வாராய்ச்சி மட்டும்தான் செய்யப் போகின்றோம். எந்த விதமான கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ள போவதில்லை என்றார்.

இதனால் மக்கள் அமைதியாக இருந்த போது அதனைச் சந்தர்ப்பமாக பயன்படுத்தி அகழ்வு பணிகளை ஆரம்பித்துவிட்டு அந்த அகழ்வுப் பணிகள் நடைபெறுகின்ற இடங்களுக்குள் பொதுமக்கள் செல்லக்கூடாது என்ற சட்ட விதிமுறைகளை நடைமுறைப்படுத்தி இரகசியமான முறையிலே பௌத்த தாது கோபுரம் கட்டுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு அந்தக் கட்டடம் இன்று உயர்ந்து நிற்கின்றது.

தொல்லியல் திணைக்களத்தினர் உடந்தையாக இருந்து பொய்யான முறையிலே வரைபடங்களைத் தயார்ப்படுத்தி இதனைக் கட்டுவதற்கு ஒத்துழைத்திருக்கின்றார்கள். ஆனால் ஏற்கனவே நீதிமன்றத்திலே தமிழ் தரப்பால் வழக்குகள் போடப்பட்டு 2018 ஆம் ஆண்டிலிருந்து வழக்குகள் நடைபெற்று வருகின்றன.

நீதிமன்றத் தீர்ப்பின்படி இங்கே எந்த ஒரு தரப்பும் கட்டுமானங்களில் ஈடுபடக்கூடாது என சொல்லப்பட்டிருந்த போதும் நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த வேண்டிய பொலிஸார் அதனை நடைமுறைப்படுத்தாமல் சட்டத்துக்கு முரணான முறையிலே சிங்களத் தரப்பைப் பாதுகாக்கின்ற விதமாகத்தான் நடந்து கொண்டிருக்கின்றார்கள்.

இதனாலே மக்கள் திரண்டு நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்துமாறு போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பொலிஸார் இந்தப் போராட்டத்திலே ஈடுபட்டிருந்த தவபாலன், சத்தியசீலன், கிந்துயன் ஆகிய மூன்று இளைஞர்களைக் கைது செய்து கடுமையாகத் தாக்கி கீழே போட்டு மிதித்து நெஞ்சிலே காலால் உதைத்து இலத்தியால் அவர்களுக்கு அடித்து மிக மோசமாகத் தாக்கியிருக்கிறார்கள்.

போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு தண்ணீரை எடுத்து வருவதற்கு கூட அனுமதிக்கவில்லை. ஆனால் இந்த பகுதிகளிலும் சரி, இந்த மலையடிவாரத்திலும் சரி, நூற்றுக்கணக்கான சிங்கள மக்கள் கொட்டகைகள் அமைத்து அவர்களுக்கு உணவுகள் எடுத்து வரப்பட்டு அவர்கள் ஆறுதலாக இருந்து அந்த உணவுகளை உண்டு கழித்து தங்களுடைய செயற்பாடுகளை செய்வதற்கு காவல் இருக்கின்ற பொலிஸார் எங்களுக்கு பச்சைத் தண்ணீர் கூட கொண்டு வர முடியாதவாறு தடுத்தது உணவு கொண்டு வந்தவர்களிடம் உணவெல்லாம் பறித்து எறிந்து மோசமான செயற்பாட்டைச் செய்திருக்கின்றார்கள்.

தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக இந்தக் கட்டுமான நடவடிக்கைகளை நிறுத்துவதாகத் தொல்லியல் பணிப்பாளர் இந்த




இடத்துக்கு வந்து உறுதிமொழி தந்திருக்கின்றார். அவருக்கு நாங்கள் கூறியிருக்கின்றோம்.

1932 ஆம் ஆண்டிலே தொல்பொருள் திணைக்களத்தினுடைய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் இது குருந்தூர் மலைக்குச் சொந்தமான இடம் என்றுதான் கூறப்பட்டிருக்கிறதே தவிர வேறு எந்த ஒரு விடயங்களும் குறிப்பிடப்படவில்லை.

ஆனால் நீங்கள் இதிலே பௌத்த அடையாளங்கள் பௌத்த கோவில் இருந்ததெனக் கூறி ஒரு வரைபடத்தைக் கொண்டு வந்து மேற்கொள்ளுகின்ற இந்த முயற்சிகள் திட்டமிட்ட ரீதியிலே அரசாங்கத்தையும், அதிகாரத்தையும் கையில் வைத்துக் கொண்டு திட்டமிட்டு பௌத்த மயமாக்குகின்ற ஒரு செயற்பாடு. இதனை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று எங்களுடைய எதிர்ப்புகளை வெளிப்படுத்தியிருந்தோம்.

நாங்கள் ஒருபோதும் நியாயமற்ற முறையிலே போராட்டங்களில் ஈடுபடுபவர்கள் அல்லர். நாங்கள் சிங்கள மக்களுக்கு , பௌத்த மதத்துக்கு எதிரானவர்கள் அல்லர், சிங்கள மக்களை , பௌத்த மதத்தை மதிக்கிறோம். ஆனால் பௌத்தத்தின், சிங்களத்தின் பெயராலும் மேற்கொள்ளப்படுகின்ற சிங்கள பௌத்த ஆக்கிரமிப்புகளை, ஒரு போதும் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்தார்.

# சர்வதேச நாணயநிதிய கடன் உதவியைப்பெற வருட இறுதிவரை காத்திருக்க வேண்டி வரும்

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து இலங்கை கடன் உதவி பெறுவதற்கு இந்த வருட இறுதிவரை காத்திருக்கவேண்டி வரும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் கோரி இருக்கும் கடன் தொகை தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வுகாண சர்வதேச நாணய நிதியத்திடம் அரசாங்கம் கடன் உதவி கோரி இருக்கின்றது.

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் உதவிகளை இலகுவில் பெற்றுக்கொள்ள முடியாது அதற்குப் பல முறைமைகள் காணப்படுகின்றன.

என்றாலும் தற்போது அரசாங்கம் கோரி இருக்கும் கடன் உதவியைப் பெற்றுக்கொள்ள இந்த வருடம் இறுதிவரை எதிர்பார்க்கவேண்டி வரும். அதற்கு முன்னர் எமக்கு பணம் கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது.

சர்வதேச நாணய நிதியத்திடம் அரசாங்கம் முன்வைத்திருக்கும் கடன் உதவி கோரிக்கைக்கு அமைய ஓரிரு நாள்களில் அவர்களின் ஊழியர் தரத்திலான குழுவொன்று கலந்துரையாட இங்கு வருவார்கள்.

கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டாலும், கலந்துரையாடல் முடிவடைந்த பின்னர் அவர்கள் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவார்கள். அது சிலவேளை மேலும் ஒருமாதமாகும் போது இடம்பெறலாம். என்றாலும் அந்த ஒப்பந்தம் மூலம் பணம் பெற்றுக்கொள்ள முடியாது.

ஏனெனில் பணம் பெற்றுக்கொள்ள சர்வதேச நாணய நிதிய நிர்வாகத்தின் அனுமதி பெறப்படவேண்டும். அதனைச் செய்ய பல விடயங்களை நாங்கள்



செய்யவேண்டி வரும்.

அதாவது, அரச நிதி முகாமைத்துவத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டி வரும். வெளிப்படையாக சொல்வதாகஇருந்தால்அரசவருமானத்தைஅதிகரித்துக்கொள்ள வேண்டிவரும்.

செலவுகளைக் குறைத்துக்கொள்ளவேண்டிவரும், அதேபோன்று நிவாரணங்கள் தொடர்பில் சிந்திக்க வேண்டி வரும். இவற்றை விட, கடன் செலுத்த இருப்பவற்றை மறுசீரமைப்பு செய்யும் சிறந்த வேலைத்திட்டத்துக்கு செல்ல வேண்டிவரும். இது இலகுவான விடயமல்ல.

அத்துடன் 1990 நடுப்பகுதியில் இருந்து நாட்டை நிர்வகித்த, ஜனாதிபதிகளாக இருந்தவர்களின் சிந்தனை, நிலைப்பாடு தவறான திசைக்கே பயணித்தது.

எமக்கு பின்னால் இருந்த பங்களாதேஷ், வியட்நாம். போன்ற நாடுகள் உலக நாடுகளுடன் இணைந்து, ஏற்றுமதிகளை அதிகரிக்கும்போது, நாங்கள் பாரியளவில் வரியை அதிகரித்துக்கொண்டு, உலக நாடுகளுடன் இணைந்து செயற்பட இருந்த சந்தர்ப்பத்தை இல்லாமலாக்கிக்கொண்டு, உலக நாடுகளில் இருந்து ஒதுக்கப்பட்டோம். – என்றார்.

# இலங்கை மின்சார சபை தலைவரும் இராஜினாமா!



இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி. பெர்டினாண்டோ தனது இராஜினாமா கடிதத்தை கையளித்துள்ளார்.

இந்நிலையில் அவர் சமர்ப்பித்த இராஜினாமாவை ஏற்றுக்கொண்டுள்ளேன் என மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கை மின்சார சபையின் புதிய தலைவராக நலிந்த இளங்கோகோன் நியமிக்கப்படவுள்ளார் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர அறிவித்துள்ளார்.

எரிசக்தி முதலீட்டுத் திட்டங்களை அதானி குழுமத்துக்கு வழங்குமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார் என ஜனாதிபதி தம்மிடம் தெரிவித்தார் என இவர் முன்னதாகக் கூறியிருந்தார்.

இருப்பினும் காற்றாலை மின் திட்டத்தை வழங்குவது தொடர்பாக இலங்கை மின்சார சபையின் தலைவர் தெரிவித்த கருத்துக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மறுப்பு வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலையில் அதிகரிக்கும் டெங்கு!

## மக்களே அவதானம்!



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

உலகளவில் ஏற்படும் அனர்த்தங்கள் ஏதோ தவிர்க்க முடியாத ஒன்றாகக் காணப்படுகிறது. இயற்கை அனர்த்தம் போல் ஏதோ ஒரு வகை நோய் மக்களை ஆட்டிப் படைக்கிறது. கொரோனா வைரஸ் தாக்கம் போன்று டெங்கின் தாக்கமும் திருகோணமலையில் ஆட்கொண்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. இதனால் மக்கள் அவதானமாக இருந்து தங்களை கொடிய நோயிலிருந்து பாதுகாக்கவும் முன்வர வேண்டும். பொடுபோக்காக இருந்தால் மரணங்களை சந்திக்க நேரிடும். கடந்த காலங்களில் 2014 ஆம் ஆண்டளவில் திருகோணமலை கிண்ணியா பகுதியில் 14 மரணங்கள் டெங்கினால் கர்ப்பிணி தாய் உட்பட காவு கொள்ளப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் தாக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் மொத்தமாக இந்த வருடம் திருமலை மாவட்டத்தில் 770 டெங்கு நோயாளர்கள் இணங்காணப்பட்டுள்ளனர். இதில் திருகோணமலை கடற்படை தளத்தில் 111 நோயாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர் எனத் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் வீ.பிரேமானந்த் தெரிவித்தார். திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

### டெங்கு வீரியம் அதிகரிப்பு

உயர் சிவப்பு வலயங்களாக திருகோணமலை, கிண்ணியா, மூதூர், உப்புவெளி, குச்சவெளி போன்ற சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் இணங்காணப்பட்டுள்ளன. இதில் கிண்ணியா சுகாதார பிரிவில் ஆண் (வயது - 38) ஒருவர் டெங்கு நோய் காரணமாக மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைத்து மரணித்த சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை பகுதியில் 203 நோயாளர்களும், மூதூரில் 203, கிண்ணியா 77,உப்புவெளி 76 என டெங்கு நோயாளர்கள் இணங்காணப்பட்டுள்ள நிலையில் கடந்த வருடம் (2021) 312 என்றவாறு நோயாளர்கள் இனங்காணப்பட்ட நிலையை விடவும் இம் முறை அது 770 ஆக அதிகரித்துள்ளது இதனைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் டெங்கு வாரமாக மே 18 தொடக்கம் 24 வரை பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த நிலையில் சுகாதாரத் தரப்புடன் முப்படையினர் இணைந்து டெங்கு ஒழிப்பு பணி இடம்பெற்றது.

இவ்வாறான கொடிய நோயிலிருந்து பாதுகாக்க பொது மக்கள் அவதானமாக செயற்படவும் தங்களது வீடுகள் காணிகளை சுத்தமாக வைத்திருக்கவும் பாவிக்காத மலசல கூடங்களை கவனமாக நீர்தேங்காத வண்ணம் சுத்தப்படுத்துவதுடன் வெற்றுக் காணிகளையும் உரிய நேரத்தினுள் சுத்தமாகப் பேணவும் அது போன்று பாடசாலைகள் அரச திணைக்களங்களில் தினசரி டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் சுத்தத்தைப் பேண நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பொது மக்களைக் கேட்டுக் கொள்வதுடன் காய்ச்சல் ஏற்படுமிடத்து உடனடியாக வைத்தியரை நாடவும் மூன்று நாள்களுக்கு மேல் காய்ச்சல் நீடிக்குமாயின் இரத்த பரிசோதனையை மேற்கொள்ளவும். இதில் பொடுபோக்காக இருக்க வேண்டாம்.

சில பிரதேசங்களில் டெங்கு ஒழிப்பு பணியின் போது லாவா குடம்பிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதில் அவதானமாக மக்கள் செயற்படவும்.

வீடுகளில் நீரை சேமித்து வைக்கும் வாளி, குடம், பரல்கள் தாங்கி என்பனவற்றிலும் மலசலகூட வாளி, குளியலறை வாளி, பறக்கும் பறவைகளுக்கு நீர் வைக்கும் பாத்திரம்,பக்குகள், தடாகங்களிலும் கிணறுகளிலும் பாவிக்காத மலசல கூடங்கள், மூடப்படாத மலசலகூடக் குழிகள், சுற்றுப்புறங்களில் வீசப்பட்ட சிரட்டை, பேணி, யோகட் கப், போத்தல்களிலும் (தெறி புழு) போன்ற அமைப்பு காணப்படுகின்றனவா? இவைதான் நுளம்பு குடம்பிகளாகும் என சுகாதார தரப்பு மக்களுக்குத் தெளிவுபடுத்தியுள்ளது. இதில் இருந்து பாதுகாக்க என்ன செய்யவேண்டும்? நீர் தேங்கும் மற்றும் சேமித்து வைக்கப்படும் பாத்திரம்/ பொருள்களில் உள்ள நீரை அகற்றி சுத்தம் செய்தல் வேண்டும்.

நீரை சேமித்து வைக்கும் ஒவ்வொரு தடவையும் வாளி, குடம், பரல்கள், தாங்கி என்பற்றை பழைய நீரை அகற்றி சுத்தம் செய்த பின்னரே புதிதாக நீரை சேமிப்பதுடன் பாதுகாப்பாக மூடி வைத்தல் வேண்டும், கிணறுகளுக்கு மீன்கள் இடுவதுடன் சிறிய இடைவெளி கொண்ட வலை இட்டு மூட வேண்டும். பாவிக்காத கிணறுகள் மற்றும் மூடப்படாத மலசலக் கூடகுழிகளுக்கு அபேட் இடல் வேண்டும். இவற்றையெல்லாம் சரிவர ஒவ்வொருவரும் உணர்ந்து செய்யும் போதே கொடிய ஆட்கொல்லி டெங்கிலிருந்து பாதுகாப்புப்பெற முடியும்.

டெங்கு நோய் தாக்கத்தில் இருந்து பாதுகாக்க மக்கள் கரிசனையுடன் செயற்படுவதுடன் நுளம்பு தாக்கம் பரவாத வண்ணம் சூழலையும் அதனை அண்டியுள்ள பகுதிகளையும் சுத்தமாகப் பேண வேண்டும். வடிகான்களில் நீர் தேங்கி நிற்காத அளவுக்கும் லாவா குடம்பிகள் இல்லாதளவுக்கு நீரை வடிந்தோடக்கூடிய வகையில் சுத்தத்தை திறம்பட பேண வேண்டிய தருணமாக இருக்கிறது.

திருகோணமலை நகர் பகுதியில் சில குடியிருப்பு நெருக்கமாகக் காணப்படுவதுடன் வடிகான்கள் துப்புரவற்ற நிலையில் உள்ளன. இவ்வாறான விடயங்களில் உள்ளூராட்சி மன்றங்கள் கண்காணித்து செயற்பட வேண்டும். முப்படையினர் டெங்கு நோய் தாக்கத்தை கட்டுப்படுத்த களத்துக்குச் சென்று செயற்படுவதுடன் சுகாதார தரப்புக்கள் டெங்கின் தீவிரத்தைக் கட்டுப்படுத்த புகை விசிறும் நடவடிக்கை என பல திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். பொது மக்கள் இந்நோயிலிருந்து பாதுகாக்க முன்கூட்டிய திட்டங்களை வகுத்து செயற்பட வேண்டும் இல்லாது போனால் பல மரணங்களை சந்திக்க நேரிடும்.

# அரசாங்கத்தை நம்பி கடன்காரர்களான பாடசாலைகளின் அதிபர்கள் ஏமாற்றம்!

## இலங்கை ஆசிரியர் சங்க உப தலைவர் வேதனை

(இ. கலையமுதன்)

(யாழ்ப்பாணம், ஜூன் 15)

அரசாங்கம் ஆரம்பப் பாடசாலைக்கு வழங்கிய மதியநேர உணவுக்கான நிதியை கடந்த 5 மாதங்களுக்கு மேலாக வழங்காத நிலையில் அந்த நிதி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் அதிபர்கள் கடைகளில் கடன்களைப் பெற்றிருந்தபோதும் இதுவரை அந்த நிதி வழங்கப்படவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன்திலீசன் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனை அவர் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் -

கல்வி அமைச்சு உத்தியோகபூர்வமாக மதிய நேர உணவை நிறுத்துமாறு அறிவிக்காத நிலையில் நிதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் ஐந்து,ஆறு மாதங்களுக்கு மேலாக கடைகளிலே கடன்களைப் பெற்று உணவுகளை மாணவர்களுக்கு பாடசாலை அதிபர்கள் வழங்கியுள்ளார்கள். இதனால் அதிபர்கள் பல லட்சங்களை கடனாகப் பெற்று தற்போது நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

வெளி மாவட்டங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மன அழுத்தங்களுக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் உட்படுகின்றனர். பாடசாலையில் வழங்குகின்ற சாப்பாட்டை நம்பி வருகின்ற மாணவர்கள் ஏராளமாக உள்ளனர். கிராமப்புறங்களில் இந்த நிலைமை அதிகமாகக் காணப்படுகின்றது.

பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கின்ற சூழலில் உணவைப் பெறக்கூட வழியில்லாத நிலையில் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்ற வறிய மாணவர்கள், துரதிர்ஷ்டவசமாக தங்கள் குடும்பத்தைப் பாதுகாப்பதற்காக உழைக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

எரிபொருள்களை வரிசைகளில் நின்று பெறவேண்டிய நிலை காணப்படுகிறது. வரிசைகளில் நின்றாலும் எரிபொருள் கிடைக்குமா என்பது சந்தேகமே. வெளி மாவட்டங்களில் வேலை செய்யும் ஆசிரியர்கள் மூன்றில் இரண்டு பங்கை எரிபொருளுக்கும் உணவுத் தேவைக்கும் செலவிடுகின்றனர்.

தற்போதைய நெருக்கடியிலும் பாடசாலைக்கு விரல் அடையாள நடைமுறையை பின்பற்றிவருகின்றனர். இதனால் ஆசிரியர்களின் விடுமுறைகள் இழக்கப்படுகிறன. அரசாங்கம் விடுகின்ற தவறுகளுக்கு ஆசிரியர்களும் அதிபர்களும் பலிக்கடாவாக்கப்படுகின்றனர். அரசாங்கம் எரிபொருள் விடயத்துக்கு சரியான தீர்வை வழங்காமல் சமையல் எரிவாயு சிலிண்டர் விடயத்துக்கு சரியான தீர்வை வழங்காமல் ஆசிரியர்கள் நேரத்துக்கு வரவேண்டும் எனக்கோருவதை ஏற்கமுடியாது என்றார்.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# தமிழ் மக்கள் எங்கு நிற்கிறார்கள்?



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் -35**


இலட்சியவேட்கை இருக்கவேண்டும், ஆனால் வாழ்வதற்கு வழி வகைகளும் வகுத்துக்கொள்ள வேண்டும்.

'புன்னகை' என்ற தலைப்பு கொண்ட சினிமா படம் பாலச்சந்தர் இயக்கியது என்று நினைப்பு. ஜெமினி கணேசன் லஞ்சம் பெற்று முன்னேற விரும்பாத, காந்தியின் கொள்கைகளில் நம்பிக்கை வைத்த லட்சியவாதி. பெற்ற அனுபவங்களும், கடைசியில் வாழ்த்தூண்டிய காரணங்களும் முத்துராமன் வளைந்து கொடுத்து வாழ்க்கையில் முன்னேறியதும், நாகேஷ் எல்லாவற்றையும் பரிசோதித்து, அவ்வப்போது வசதியாக ஒட்டிக்கொண்டு கடைசியில் ஒன்றிலுமே தேறாத கதாபாத்திரமாக மிளிர்ந்ததும் கதை.

இதைப்போலவே துக்ளக் சோவைப் பற்றியும் ஒரு செய்தி சொல்லப்படவதுண்டு.

தமிழ்நாட்டில் ஹிந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் நடந்த காலம். துக்ளக் சோ திராவிடக் கட்சிகளுக்கு ஆதரவானவர் அல்லர். அன்று தனது பத்திரிகை அலுவலகத்தில் இருந்தபோது வீதியில் மக்கள் ஆர்ப்பாட்டங்கள் செய்து வாகன எரிப்புகளிலும் ஈடுபட்டிருந்தனர். பல மணித்தியாலங்கள் அடைபட்டுக் கிடந்த சோ கடைசியாக தனது பாணியில் ஓர் உத்தியைக் கையாண்டு தன்னையும் அலுவலகத்தின் சிலரையும் வண்டியில் ஏற்றிக்கொண்டு சிரமப்படாமல் அங்கிருந்து வெளியேறிச் சென்றாராம். அவர் காரின் இரு பக்கங்களிலும் இரண்டு நோட்டீஸ் அட்டைகளில் 'தமிழரும் வாழ்க! என் காரும் வாழ்க!' என்று கொட்டை எழுத்துக்களில் எழுதி தொங்கவிட்டுக் கொண்டு சென்றதே அவர் செய்த வேலை. சமயோசிதமும் சந்தர்ப்பங்களில் உதவும்.

அரசியலில் இன்னுமொரு முக்கியமான உதாரணத்தை பார்த்தால் அது இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் நடந்தது. காந்தி, நேரு, பட்டேல், ராஜாஜி, ராதாகிருஷ்ணன் என்ற பெரும் காங்கிரஸ் தலைவர்களுடன் சுதந்திரத்திற்காக முஸ்லிம் மக்களையும் இணைத்துப் பயணித்தவர் முஹம்மது அலி ஜின்னா. பிரித்தானியாவும் பணிந்து இந்தியாவுக்கு சுதந்திரம் தர ஒப்புக்கொண்டு நாள்களும் குறிக்கப்பட்ட வேளையில், முஸ்லிம்களுக்காகத் தனி நாடு உருவாக வேண்டும் என்று போர்க்கொடி தூக்கினார் ஜின்னா. தக்க நேரத்தில் இளகிய இரும்பை அடிக்கும் நிலைமை. தனது நண்பரின் கோரிக்கையில் காந்தியே அதிர்ந்து போனார். ஆனால் என்னவோ அதுதான் தங்களின் வேளை, பாகிஸ்தான் இல்லாவிட்டால் இந்தியாவின் சுதந்திரமும் கேள்விக்குறியாகும் என்றார் ஜின்னா. எவ்வளவோ ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளானார். தான் தோள் கொடுத்துப் போராடிய இந்துக்களையோ, தனது காங்கிரஸ் நண்பர்களையோ பற்றி அவர் சிந்திக்கவே இல்லை. பாகிஸ்தானின் பிறந்தது.




ஜின்னாவும் காந்தியும்

ஜின்னா அதன் தந்தையாக முஸ்லிம் மக்களால் மதிக்கப்பட்டார். சந்தர்ப்பங்களைத் தனது மக்களுக்காகச் சாதுரியமாக தக்க நேரத்தில் பயன்படுத்தியவர் என்று அவர்களது வரலாறுகள் அவரைப் பற்றி கூறுகின்றன.

இலங்கையிலும் தமிழ் மக்களுடன், தமிழ் மக்களாக, ஆயினும், முஸ்லிம் மதத்தைப் பின்பற்றுபவர்களாக, காலங்காலமாக முஸ்லிம் தலைவர்கள் இருந்தார்கள். மாக்கான் மாக்கார், காரியப்பர் எனப் பலர் தமிழர்களோடு சேர்ந்து தமிழ் பரப்பிலே அரசியல் செய்த கனவான்கள்.

சந்தர்ப்பங்கள் வந்த வேளைகளில், அந்தப் பாரம்பரியங்களை எல்லாம் எடுத்தெறிந்து, அரசியலுக்காக – சிங்களப் பேரினவாதத்தின் அனுசரணைக்காக – அஷ்ரப் முஸ்லிம்கள் தனி இனம் என்று முஸ்லிம் காங்கிரஸைத் தோற்றுவித்து, வடக்கு – கிழக்கின் இணைப்புக்கும் ஆப்பு கள் வைத்தார். அதன் தொடர்ச்சிகளில் கூட்டமைப்பின் சம்பந்தன், முஸ்லிம் ஒருவரை கிழக்கு மாகாணசபைத் தலைவராகப் பரிந்துரைத்தார்.




அஷ்ரப்

தமிழ் மக்கள் இப்படியான பெருந்தன்மையிலேயே வாழ்ந்து கொண்டிருப்பதாலேயே என்னவோ அவர்கள் தமிழக முதல்வரின் உதவிகள் எல்லோருக்கும் தரப்படவேண்டும் என்று தாராளத்தன்மையுடன் கேட்டார்கள். அப்படியானபடியால்தானோ என்னவோ 'வீடு பட்டினியில் வாட அப்பன் தானம் செய்கிறான்' என்ற வழக்கு மொழியும் தமிழ் மக்களிடம் ஏற்பட்டுள்ளது.

கிருஷ்ண பரமாத்மாவை பாருங்கள். பாண்டவர்களுக்காகத் தூது சென்றபோது சபையில் துரோணரையும் கர்ணனையும் தர்க்கிக்க வைத்து, துரோணர் சேனைத் தளபதியாக இருக்கும் வரை தான் போரில் பங்கெடுக்க மாட்டேன் என கர்ணனை சூளுரைக்க வைக்கவில்லையா? அதே அரங்கில் திருஷ்டராத்திரனையும் அவனது சித்தப்பனையும் மோதவிட்டு அவர்களைப் பிரிக்கவில்லையா? பின்னர் யாரும் அறிந்திராத கர்ணனின் பிறப்பை குந்திதேவிக்குச் சொல்லி அவள் கர்ணன் அர்ஜுனனைக் கொல்ல எத்தனித்தால் நாகாஸ்திரத்தை ஒருமுறைக்கு மேல் ஏவக்கூடாது என்று சத்தியங்கள் பெறவைக்கவில்லையா? இவை எல்லாம் கிருஷ்ண பரமாத்மா பாண்டவர்களுக்கான தர்மத்தை நிலைநாட்ட எடுத்த சாணக்கியங்கள் என்று மகாபாரதம் சொல்கிறது.

தமிழர் தரப்பிலும் தர்மம் நிலைநாட்டப்பட வேண்டும். ஆனால் சாணக்கியத்துடன் இயங்கும் கிருஷ்ணர்களைக் கண்டு கொள்வதுதான் கஷ்டமாக இருக்கிறது. எழுந்திருக்கும் இந்த காலகட்டத்தை தமிழ் மக்கள் மிகவும் கவனமாகவும் நிதானமாகவும் ஒருங்கிணைந்தும் கையாள வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

(வளரும்)



சோ



சம்பந்தன்

# நிறைவேற்றதிகார பிரதமர் முறைமை உருவாகி விடாமல் இருப்பதில் அனைவரும் அவதானமாக இருக்க வேண்டும்!

## மஹிந்த தேசப்பிரிய ‘அட்வைஸ்’



நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு காணப்படுவதைப் போன்று, நாடாளுமன்றத்தால் ஜனாதிபதியைப் பதவி நீக்குவதற்கான வழிமுறைகளும் இலகுவாக்கப்பட வேண்டும்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்து நிறைவேற்றத்திகார பிரதமர் முறைமை தோற்றம் பெற்றுவிடாமல் இருப்பது தொடர்பிலும் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும், தற்போதைய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவருமான மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சி ஊடக நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு 21 ஆவது அரசமைப்பு திருத்தம் தொடர்பில் கருத்து வெளியிட்ட போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

2015 நவம்பர் 12 ஆம் திகதி வரையே தேர்தல்கள் ஆணையாளர் என்ற தனிநபர் தீர்மானங்கள் எடுக்கக் கூடிய முறைமை காணப்பட்டது.

அதன் பின்னர் தேர்தல் ஆணையாளருடன் தேர்தல் ஆணைக்குழுவின் ஏனைய இரு உறுப்பினர்களும் இணைந்து மூவரும் ஒருமித்து தீர்மானங்களை எடுக்கக் கூடிய முறைமை உருவாக்கப்பட்டது.

அதற்கமைய அதன் பின்னரான காலப்பகுதியில் வேட்புமனு தாக்கல் வர்த்தமானி அறிவித்தல் தேர்தல் ஆணையாளர் மற்றும் ஏனைய இரு உறுப்பினர்களதும் கையொப்பத்துடனேயே வெளியிடப்பட்டது.

எனவே இரட்டை குடியுரிமையுடைய பிரஜை வேட்புமனு தாக்கல் செய்யும் விவகாரத்தில் தேர்தல் ஆணையாளர் ஏகமனதாக செயற்பட்டார் என்று முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு பொருத்தமற்றது.

அது மாத்திரமின்றி 2019 தேர்தலின் போது வேட்புமனு தாக்கல் செய்வதற்கான தினம் அறிவிக்கப்பட்டு தேர்தல் முடிவுகள் வெளிவருவதற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தேர்தல் ஆணைக்குழுவிற்கு இது தொடர்பில் எந்தவொரு முறைப்பாடும் கிடைக்கப் பெறவில்லை. அவ்வாறு முறைப்பாடு கிடைக்கப் பெற்றிருந்தால் அது தொடர்பில் ஆராய்ந்திருக்கலாம்.

நாட்டில் தற்போது வன்முறையற்ற புரட்சிகரமான மாற்றம் அவசியமாகும். எனவே 17 மற்றும் 19 ஆவது அரசமைப்பு திருத்தங்களிலுள்ள விடயங்களைத் தவிர்த்து புதிய அரசமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதும், பிறிதொரு ஜனாதிபதியைத் தெரிவு செய்வதும் பொருத்தமற்றது.

எனவே 21 ஆவது அரசமைப்பு திருத்தம் 19 இற்கும் அப்பாற்பட்ட 19 பிளஸாகவே அமைய வேண்டும். அதில் தேர்தல் ஆணைக்குழு மற்றும் அதனுடன் தொடர்புடைய கடமைகள் பொறுப்புக்கள் தொடர்பான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

காரணம், 19 ஆவது அரசமைப்பு திருத்தத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆலோசனைக்கமைய சுயாதீன தேர்தலை நடத்தக் கூடிய சூழலை உறுதிப்படுத்துவது ஜனாதிபதியின் கடமையாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் 20 இல் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு ஏற்ப தேர்தலை நடத்தக் கூடிய - உறுதிப்படுத்தக் கூடிய அதிகாரம் ஜனாதிபதிக்குரியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதே போன்று 19 இல் பொதுத் தேர்தலுக்காக நாடாளுமன்றம் கலைக்கப்படும் போது அமைச்சரவை அமைச்சர்கள் மாத்திரமே பதவியிலிருப்பர். ஆனால் 20 இன் படி பிரதி அமைச்சர்கள் இராஜாங்க அமைச்சர்களும் கூட பதவியைத் தொடர முடியும் என்றுள்ளது. இது மாற்றியமைக்கப்பட வேண்டும்.

எனவே தான் 19 பிளஸிற்குச் செல்வது அத்தியாவசியமானது என்பதை வலியுறுத்துகின்றோம். தற்போதுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மக்களின் கோரிக்கைகளை செவிமடுக்கின்றனரா என்பது கேள்விக்குறியாகும். தற்போது அதிகாரம் ஓர் இடத்தில் குவிந்துள்ளமையால் அனைவரும் ஒன்றிணைந்து இந்த விடயத்தில் செயற்பட வேண்டும்.

பாதுகாப்பு அமைச்சைத் தவிர ஜனாதிபதியால் வேறெந்த அமைச்சுக்களையும் வகிக்க முடியாது என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

இருந்தபோதிலும் பாதுகாப்பு அமைச்சையும் ஜனாதிபதியால் வகிக்க முடியாது என்ற திருத்தம் கொண்டு வரப்பட வேண்டுமெனில் அதற்கு மக்களின் நிலைப்பாடு கோரப்பட வேண்டும். அது விரைவில் இந்த முறைமை நடைமுறையிலிருக்க வேண்டும்.

அதே போன்று ஜனாதிபதிக்குரிய அதிகாரங்கள் அனைத்தும் குறைக்கப்பட்டு நிறைவேற்றதிகார பிரதமர் முறைமை உருவாகி விடாமல் இருக்கவேண்டும் என்பதிலும் சகலரும் அவதானம் செலுத்த வேண்டும்.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவை என்ற மூன்றும் நாடாளுமன்றத்துக்கு பொறுப்பு கூற வேண்டியவையாக இருக்க வேண்டும். குறிப்பாக 21 ஆவது திருத்தத்தில் அரச சேவைகளும் சுயாதீனமாக்கப்பட வேண்டும்.

அதிபர் ஆசிரியர் நியமனம் , பிரதேச செயலாளர்கள் நியமனம் மற்றும் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரியின் நியமனம் உள்ளிட்ட விடயங்களில் காணப்படும் அரசியல் தலையீடு இல்லாமலாக்கப்பட வேண்டும்.

குறிப்பிட்ட காலத்தின் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதைப் போன்று , ஜனாதிபதியை பதவி நீக்கும் வழிமுறைகளும் இலகுவாக்கப்பட வேண்டும்.

அதாவது ஜனாதிபதியைப் பதவி நீக்குவதற்காக குற்றப் பிரேரணையொன்றை சமர்ப்பித்து அதன் பின்னர் காணப்படும் மிக நீண்ட வழிமுறைகள் நீக்கப்பட்டு நாடாளுமன்றத்திற்கு இலகுவாக ஜனாதிபதியை பதவி நீக்கக் கூடிய முறைமை உருவாக்கப்பட வேண்டும். - என்றார்.

# இராசதானியம் திட்டம் சங்கானையில் நடந்தது





தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் இராசதானியத் திட்டம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு சங்கானையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியப்பசுமை இயக்கம் சிறுதானியங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் சிறுதானியங்களை மீள முடிசூட்டுவோம் என்னும் கருப்பொருளில் இராசதானியம் என்ற திட்டத்தை விவசாயக் கிராமங்களில் முன்னெடுத்து வருகிறது. இதன் தொடர்ச்சியாகவே இந்தத் திட்டத்துக்கான விதைகள் வழங்கும் நிகழ்வு சங்கானை மடத்தடியில் நடந்தது.

மடத்தடி வரசித்தி விநாயகர் ஆலய முன்றிலில் தி. சத்தியேந்திராவின் தலைமையில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், பொருளாளர் க. கேதீஸ்வரநாதன் ஆகியோர் இராசதானியத் திட்டம் தொடர்பான கருத்துரைகளை வழங்கியிருந்தார்கள். ஓய்வுநிலை பிரதி விவசாயப்பணிப்பாளர் பொ. அற்புதச்சந்திரன் சிறுதானியங்களின் செய்கை முறைபற்றிய வழிகாட்டுதல்களை வழங்கியிருந்தார்.

இதன்போது ஐம்பது விவசாயிகளுக்குக் குரக்கன், காராமணி (கௌபி), பயறு விதைகள் வழங்கி வைக்கப்பட்டன. இலவசமாக வழங்கப்பட்ட விதைகளின் இரட்டிப்பு மடங்கு விதைகள் சுழற்சி முறையில் ஏனைய விவசாயிகளுக்கு வழங்கும்பொருட்டுத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்திடம் கையளிக்க வேண்டும் என்ற புரிந்துணர்வின் அடிப்படையிலேயே இந்த விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

நாடு எதிர்நோக்கியுள்ள உணவுப் பஞ்சத்துக்கு முகங்கொடுக்கும் விதமாக அதிக நீரும், அதிக உரங்களும் தேவைப்படாத குறுகிய காலப்பயிர்களான சிறுதானியங்கள் மற்றும் அவரையினப் பயிர்களை உற்பத்தி செய்வதில் விவசாயிகள் தற்போது ஆர்வம் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தேக்கு மரக்குற்றிகளைக் கடத்த முற்பட்ட லொறி குடை சாய்ந்து புத்தளத்தில் விபத்து!

## சந்தேக நபர் கைது

புத்தளம் பகுதியில் தேக்கு மரக்குற்றிகளை கடத்த முற்பட்ட லொறி குடை சாய்ந்து விபத்துக்குள்ளாகியது. மரக்கடத்தலில் ஈடுபட்ட சந்தேக நபர் பொலிஸ் போதை ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக தேக்கு மரக்குற்றிகளை கடத்திய லொறியொன்று 13 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் புத்தளம் நூர்நகர் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டையிழந்து குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

புத்தளம் பிராந்திய பொலிஸ் போதை ஒழிப்புப் பணியகத்துக்கு அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமாக தேக்கு மரக்குற்றிகளை கடத்திச் செல்வதாகக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய புத்தளம் பகுதியில் குறித்த லொறியை நிறுத்த முற்பட்ட வேளையில் லொறியை நிறுத்தாமல் சாரதி தப்பிச்சென்றுள்ளார்.

இதன்போது மேற்படி கடத்தல் லொறியை பொலிஸார் துரத்திச் சென்றவேளையிலே லொறி வேகக் கட்டுப்பாட்டையிழந்து குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது வீட்டின் மதில் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் மரக்குற்றிகள் சிதறடிக்கப்பட்டு மின்கம்பத்தில் மோதூண்டு மின்கம்பம் உடைந்தமையால் அப்பகுதியில் மின்சாரம் தடைப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மரக்குற்றிகளைக் கடத்திய சாரதி பொலிஸ் போதை ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் கைது செய்யப்பட்ட சாரதியையும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட லொறி மற்றும் தேக்கு மரக்கட்டைகளையும் புத்தளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை புத்தளம் பிராந்திய பொலிஸ் போதை ஒழிப்புப் பிரிவினர் மற்றும் புத்தளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் என இதன்போது தெரிவித்தனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.06.2022இல் வெளியிடப்பெற்றது